
**ஏப்ரல் – 20**

# தமிழ்நாடு செய்திகள்

## இ-டாக்ஸி

- ❖ மதராஸ் ஐ.ஐ.டி நிறுவனத்தின் உதவி பெறும் ஒரு புத்தாக்க தொடக்க நிறுவனமான இ-பிளேன் என்ற நிறுவனமானது நகர்ப்புறப் பயணத்திற்காக வேண்டி ஒரு பறக்கும் டாக்ஸியை வடிவமைத்துள்ளது.
- ❖ இது மக்களைத் தங்கள் அவர்கள் சேர வேண்டிய இடத்திற்கு
    - 10 மடங்கு வேகமாக,
    - பாதுகாப்பாக,
    - குறைந்த பொருளாதார செலவில்,
    - சத்தமில்லாமல் மற்றும்
    - சுற்றுச்சூழல் பாதிப்பில்லாதவாறு கொண்டு செல்ல முடியும்.
- ❖ பேட்டரி மூலம் இயங்கும் இந்த டாக்ஸியானது 200 கிலோ தாங்குசுமை கொண்டிருக்கும்.
- ❖ இது இரண்டு பயணிகளுக்கு இடமளிக்கும்.
- ❖ இதன் இறுதி முன்மாதிரி 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## உத்திரமேரூர் அருகே அரியவகை கல்செக்கு

- ❖ காஞ்சீபுரம் மாவட்டம் உத்திரமேரூர் அருகே விண்ணமங்கலம் கிராமத்தில் அரியவகை கல்செக்கு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ❖ மண்ணில் புதைந்து கிடக்கும் இது 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.
- ❖ 3 வரியில் அதில் கல்வெட்டு எழுத்துகள் இருந்தன.



## வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தமிழகம் சாதனை

**Generating employment** | After a gap of four years, Tamil Nadu's tally with regard to the generation of person days has crossed the 30-crore mark

**Performance of the South in MGNREGS in a pandemic year (2020-21)**



| State/ Union Territory | Person days generated (in crore days) | | Share in person days (in %) | | Families employed (in lakh) | Families with 100 days' work (in lakh) | Wages paid (in ₹ crore) | Average rate a day per person (in ₹) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Target | Actual | SC/STs | Women | | | | |
| Tamil Nadu | 32 | 33.4 | 31.13 | 85.37 | 66.49 | 1.79 | 6,321.88 | 191.65 |
| Andhra Pradesh | 25.25 | 25.93 | 33.38 | 57.21 | 47.71 | 8.64 | 5,731.91 | 228.74 |
| Telangana | 15.5 | 15.36 | 42.78 | 58.04 | 30.91 | 3.16 | 2,543.58 | 169.95 |
| Karnataka | 14.65 | 14.87 | 27.71 | 49.46 | 30.21 | 2.42 | 3,994.61 | 270.84 |
| Kerala | 10 | 10.23 | 22.1 | 90.49 | 16.17 | 4.7 | 3,000.47 | 294.65 |
| Puducherry | 0.11 | 0.106 | 32.77 | 86.82 | 0.48 | 0.00042 | 22.77 | 215.11 |
| **All India** | **383.33** | **389** | **37.69** | **53.17** | **756** | **71.96** | **77,747.49** | **200.76** |

Note: Figures are approximate
Source: Website of the Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (http://nrega.nic.in/)

- இப்போது முடிவடைந்த நிதியாண்டில் (2020-21) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை அமல்படுத்துவதில் தமிழகம் சாதனை படைத்துள்ளது.

- நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மாநிலத்தில் உருவாக்கப்பட்ட தனிநபர் பணி நாட்கள் 30 கோடியைத் தாண்டி உள்ளது.
- இது 33.4 கோடி தனிநபர் பணி நாட்களைக் கொண்டுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில், மாநிலத்திற்கு 27 கோடி தனிநபர் பணி நாட்கள் என்ற இலக்கை மத்திய அரசு நிர்ணயித்து இருந்தது.
- பின்னர், அது அந்த இலக்கை 32 கோடி தனிநபர் பணி நாட்களாகத் திருத்தியது.
- கடந்த ஆண்டு தனிநபர் பணி நாட்கள் இலக்கை மிஞ்சிய மாவட்டங்களில் சேலமும் ஒன்றாகும், இது 1.12 கோடி என்ற அங்கீகரிக்கப் பட்ட தனிநபர் பணி நாட்களுக்கு எதிராக சுமார் 1.24 கோடி தனிநபர் பணி நாட்களை உருவாக்கியுள்ளது.
- இயற்கை வள மேலாண்மை, நீர்ப் பாதுகாப்பு மற்றும் தோட்டக்கலை ஆகியவற்றில் காஞ்சீபுரத்தின் செயல்திறன் சிறப்பாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்


## இந்திய ஆற்றல் தளம்

- நிதி ஆயோக் ஆனது சமீபத்தில் இந்திய ஆற்றல் தளம் (India Energy Dashboards) பதிப்பு 2.0 என்ற தளத்தை அறிமுகப்படுத்தியது.
- இது நாட்டில் பயன்பாடு, விலை நிர்ணயம், உற்பத்தி, ஆற்றல் விநியோகம் தொடர்பான தரவுகளுக்கு ஒரு ஒற்றைச் சாளர அணுகலை வழங்கும்.
- இது சௌபாக்யா, PRAAPTI, UJALA மற்றும் வித்யுத் PRAVAH போன்ற சில திட்டங்களிலிருந்தும் தரவுகளை வழங்கும்.
- இது மத்திய மின்சார ஆணையம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் மற்றும் நிலக்கரிக் கட்டுப்பாட்டாளர் அமைப்பு அகியவற்றிலிருந்துத் தரவுகளை வழங்கும்.
- இந்திய ஆற்றல் தளம் பதிப்பு 1.0 ஆனது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## சுதந்திரக் கடல் போக்குவரத்து

- அமெரிக்கக் கடற்படை சமீபத்தில் லட்சத்தீவு அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் சுதந்திரக் கடல் போக்குவரத்து என்ற ஒரு நடவடிக்கையை நடத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையின் போது, அமெரிக்க போர்க் கப்பலானது இந்தியாவின் முன் ஒப்புதல் பெறாமல் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைந்தது.
- ஐக்கிய நாடுகளின் கடல் சட்டத்தின் கருத்துப்படி, கப்பல்கள் தமது பிரத்தியேக பொருளாதார மண்டலத்தைப் பயன்படுத்துவதை அந்த நாடுகளால் தடுக்க முடியாது.
- இருப்பினும், இந்தியச் சட்டங்களின்படி, எந்தவொரு வெளிநாட்டு இராணுவமும் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் எந்தவொரு நடவடிக்கையையும் செய்வதற்கு முன்னர் தெரிவிக்க வேண்டும்.
- வளரும் நாடான இந்தியா, அதன் EEZ மண்டலத்தை இன்னும் முழுமையாக ஆராய வேண்டும்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவில் பெட்ரோலிய நுகர்வு


- இந்தியாவின் பெட்ரோலிய நுகர்வு குறித்த ஒரு அறிக்கையை பெட்ரோலிய அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டது.
- அந்த அறிக்கையின்படி, நாட்டின் எரிபொருள் நுகர்வு முந்தைய ஆண்டை விட 2020-21 ஆம் ஆண்டில் 9.1% குறைந்துள்ளது.
- 1998-99 ஆம் ஆண்டிற்குப் பிறகு பெட்ரோலிய நுகர்வு அதிகபட்சமாக சுருங்குவது இதுவே முதல் முறையாகும்.

## இந்தியாவின் கடன் விகிதம்

- COVID-19 தொற்று நெருக்கடியால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் கடனுக்குமான விகிதமானது 74% என்ற அளவில் இருந்து 90% ஆக அதிகரித்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் சமீபத்தில் அறிவித்துள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டில் 99% ஆக அதிகரிக்க உள்ளது.
- பொருளாதார மீட்சிக்குப் பிறகு இது 80% ஆகக் குறைக்கப்படுவதாக அந்த சர்வதேச நிதி அமைப்பு தெரிவித்துள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடன் விகிதம் என்பது அதன் நாணயத்தின் அலகுகளில் அளவிடப்பட்ட அரசாங்கத்தின் கடனுக்கும் அதே அலகில் அளவிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான ஒரு விகிதமாகும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடன் விகிதம் குறைவாக உள்ளது என்பதற்கான அர்த்தம் அந்த நாடு மேலும் கடன்களை வாங்காமல் கடன்களைத் திருப்பிச் செலுத்த போதுமான அளவிற்குப் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்வது என்பதாகும்.
- இந்தியாவின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் 1991 ஆம் ஆண்டு முதல் 70% ஆக உள்ளது.
- இந்தியாவில் பொதுக் கடன் என்பது மத்திய அரசின் மொத்தப் பொறுப்பாகும், இது இந்தியாவின் தொகுப்பு நிதியிலிருந்துச் செலுத்தப்பட வேண்டும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஈரான் அணுசக்தி திட்டம்




- ஈரான் தனது தேசிய அணுசக்தித் தொழில்நுட்பத் தினத்தை முன்னிட்டு அதன் நேட்டான்ஸ் அணுமின் உற்பத்தி நிலையத்தில் மேம்பட்ட அணுசக்தி மைய விலக்கிகளை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது.
- ஈரான் தனது யுரேனியம் விநியோகத்தை 60 சதவீத தூய்மைக்கு என்ற அளவில் செறிவூட்டத் தொடங்கியுள்ளது.
- ஈரான் முதன்முறையாக இந்த நிலைக்கு வந்துள்ளது.
- இது ஓர் ஆயுதம் தயாரிப்பதிற்குத் தேவையான மிக நெருக்கமான நிலையாகும்.
- 2015 அணுசக்தி ஒப்பந்தம் என்று அழைக்கப்படும் கூட்டு அணுசக்தித் திட்டத்தின் கீழ், ஈரான் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அளவில் மட்டுமே யுரேனிய செறிவூட்டல் மைய விலக்குகளை பயன்படுத்த இயலும்.
- இருப்பினும், 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில், டொனால்ட் டிரம்பின் தலைமையிலான அமெரிக்க அரசானது இந்த ஒப்பந்தத்தை கைவிட்டு விட்டு ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் விதித்தது.
- ஜோ பிடனின் தலைமையின் கீழான தற்போதைய அமெரிக்க அரசு இதைத் திரும்ப நீக்குவதாக உறுதியளித்துள்ளது.

### *மையவிலக்கி*

- இது ஓர் ஊடகத்தில் உள்ள துகள்களைப் பிரிக்கப் பயன்படுகிறது.
- ஓர் அணு மையவிலக்கியில், யுரேனியம் 235 ஆனது யுரேனியம் 238 என்பதிலிருந்துப் பிரிக்கப் படுகிறது.
- அணு உலையில் பயன்படுத்தப்படும் அணு எரிபொருளானது அதன் இயற்கையான செறிவூட்டலை விட, அதாவது யுரேனியம் 238 என்பதை விட யுரேனியம் 235 என்ற ஐசோடோப்பின் செறிவு அதிகமாக இருக்க வேண்டும்.
- யுரேனியம் 235 ஆனது யுரேனியம் 238 என்பதை விட அதிக கதிரியக்கம் கொண்டது ஆகும்.

### நானோ நுகர்வி


- மத்தியக் கல்வி அமைச்சர் சமீபத்தில் உலகின் முதல் நுண் உணர்வி அடிப்படையில் அமைந்த சிறு அளவு வெடிபொருட்களைக் கண்டுபிடிக்கும் கருவியான (Explosive Trace Detection) “நானோ நுகர்வி” என்ற ஒரு கருவியினை (NanoSniffer) அறிமுகப் படுத்தினார்.
- பம்பாய் ஐ.ஐ.டி நிறுவனத்தால் உதவி பெறும் ஒரு புத்தாக்க தொடக்க நிறுவனமான நானோஸ்னிஃப் டெக்னாலஜிஸ் (NanoSniff Technologies) என்ற ஒரு நிறுவனத்தால் இது உருவாக்கப் பட்டது.
- நானோ நுகர்வியால் பத்து வினாடிகளுக்குள் வெடிபொருட்களைக் கண்டறிய முடியும்.
- இதனால் அனைத்து வகையான, இராணுவம் மற்றும் தனிநபர் தயாரிக்கும் வழக்கமான வெடிபொருட்களைக் கண்டறிய முடியும்.
- இதனால் நானோ கிராம் அளவு வெடிபொருட்களைக் கூட கண்டறிய முடியும்.
- Explosive Trace Detection என்பது சிறிய அளவிலான வெடிபொருட்களைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு தொழில்நுட்பமாகும்.
- இந்த தொழில்நுட்பத்தின் மூன்று முக்கிய பண்புகள் உணர்திறன், குறைந்த எடை மற்றும் அளவு ஆகியனவாகும்.

## முக்கிய தினங்கள்

### பன்னாட்டு ஹைக்கூ கவிதை தினம் - ஏப்ரல் 17

- இது ஹைக்கூ அறக்கட்டளையின் ஒரு முன்னெடுப்பாகும்.
- ஹைக்கூ என்பது ஜப்பானியக் கவிதைகளின் ஒரு பண்டைய வடிவமாகும்.


### உலக இரத்தப்போக்கு நோய் தினம் - ஏப்ரல் 17




- இந்த ஆண்டின் கருத்துரு “Adapting to change: sustaining care in a new world” என்பதாகும்.
- இது ‘ஹீமோபிலியா உலகக் கூட்டமைப்பின்’ (World Federation of Haemophilia) ஒரு முன்னெடுப்பாகும்.

- ஃபிராங்க் ஷ்னாபலின் அவர்களைக் கௌரவிக்கும் விதமாக அவரது பிறந்தநாளான ஏப்ரல் 17 இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## உலகப் பாரம்பரிய தினம் - ஏப்ரல் 18




- இது நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான சர்வதேச தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 18, அன்று சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான மன்றத்தால் (ICOMOS-International Council on Monuments and Sites) முன்மொழியப் பட்டு, 1983 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பொதுச் சபையால் அது அங்கீகரிக்கப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Complex Pasts: Diverse Futures" (சிக்கலான கடந்த காலங்கள்: பன்முகத் தன்மை கொண்ட எதிர்காலங்கள்) என்பதாகும்.
- தற்போது, இந்தியாவில் 38 உலகப் பாரம்பரிய தளங்கள் உள்ளன, அவற்றில் 30 பண்பாட்டு ரீதியிலான பாரம்பரியத் தளங்களும், 7 இயற்கை ரீதியிலான பாரம்பரியத் தளங்களும் மற்றும் 1 கலப்புத் தளமும் உள்ளது.
- கஞ்சன்ஜங்கா தேசியப் பூங்கா என்பது கலப்புத் தளம் ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர் நகரமானது கலாச்சாரப் பட்டியலின் கீழ் இந்தியாவின் 38வது தளமாக தேர்ந்தெடுக்கப் பட்டது
- இந்திய நாடானது, தளங்களின் எண்ணிக்கையில் உலகளவில் ஆறாவது இடத்தில உள்ளது.
- இது வரையில் சீனா, இத்தாலி, ஸ்பெயின், ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியவை மட்டுமே இந்தியாவை விட இந்தப் பட்டியலில் அதிக தளங்களைக் கொண்டு உள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★